# ஜீலை 26 - புனித சுவக்கீன்,புனித அன்னம்மாள்

சுவக்கீன் என்றால் ஆண்டவரது தயாரிப்பு என்பது பொருள். அன்னா என்றால் இறைவனது அருள் என்று பொருள். அன்னம்மாள் பெத்லகேமில் பிறந்தாள். நாசரேத்தில் வாழந்த சுவக்கீன் என்பவரை மணந்தாள். இருவரும் தாவீது அரசருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு நெடுங்காலமாக குழந்தை இல்லை. பிறகு மரியாள் பிறந்தாள் மரியாளுக்கு மூன்று வயது ஆனதும் தேவாலயத்திற்குச் செல்லும்படி அவளைக் கடவுள் அழைத்தார். சுவக்கீனும் அன்னம்மாளும் தியாக குணம் படைத்தவர்கள். நெடுங்காலமாய் தவம் இருந்த கடவுளை மன்றாடிப் பெற்றெடுத்த அழகிய குழந்தையை கடவுளுக்கு இவர்கள் அர்ப்பணம் செய்தார்கள்.

ஆதியிலிருந்தே புனித அன்னம்மாள் விசுவாசிகள் வந்தித்து வந்திருக்கிறார்கள். இவளுக்குத் தோத்திரமாக கோவில்கள் கட்டப்பட்டன. கிழக்கத்திய திருச்சபையின் பிதாப்பிதாக்கள் இவளது பரிசுத்த தனத்தைப் பற்றியும் இவள் பெற்ற வரங்களைப் பற்றியும் அழகாக கூறியிருக்கிறார்கள். 4-ஆம் நூற்றாண்டில் புனித சுவக்கீனுக்குத் தோத்திரமாக யெசலேமில் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது.

<u>சிந்தனை:</u>

இவர்களைப் போல் கடவுளுக்காக, நாம் நேசிக்கும் இடம், பொருள், ஆட்களை தியாகம் செய்வதற்காக தைரியத்தைக் கேட்டு மன்றாடுவோம்.

<u>செபம்:</u> ஆண்டவரே, தியாக மனப்பான்மையை எங்கள் அனைவருக்கும் தாரும்.

